விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 339 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 07 புதன்கிழமை (23.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## 2023ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

### கூட்டமைப்பு புறக்கணிப்பு

(கொழும்பு)

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 37 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த திங்கட்கிழமை 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்ற நிலையில் நேற்று மாலை வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்போது, வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 121 வாக்குகளும் எதிராக 84 வாக்குகளும் வழங்கப்பட்டிருந்தன. 11

## கனடா அனுப்புவதாகக் கூறி சுமார் 100 இலட்சம் மோசடி

### யாழில் பெண்ணொருவர் மீது பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கனடா அனுப்புவதாகக் கூறி சுமார் 100 இலட்சம் ரூபாய் மோசடி செய்த பெண்ணொருவர் மீது மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு - வடலியடைப்பு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கனடாவிற்கு அனுப்புவதாக கூறி 99 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மோசடி செய்ததாக நேற்றைய தினம் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் 11

## நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு

### இன்று முதல் அமுலாகின்றது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இன்று புதன்கிழமை முதல் விசேட சுற்றிவளைப்பு நடத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிக விலைக்கு உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களை அடையாளம் காணும் வகையில் இந்த சுற்றி 11

# பிரச்சினைகளைக் கண்டு அஞ்சி ஓடக்கூடாது

## பாராளுமன்றத்தில் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

பிரச்சினைகளைக் கண்டு அஞ்சி ஓழிவது தங்களின் கொள்கை கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

### பாடசாலைச் சீருடையுடன்

## மதுபானம் அருந்திய 5 மாணவர்கள் கைது

(கொழும்பு)

பாணந்துறையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர்கள் 5 பேர் நேற்று பிற்பகல் பாணந்துறை கடற்கரையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை சீருடையில் மதுபானம் அருந்திக் கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட அவர் 11

## யாழ்.பல்கலை மாணவன் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக முகாமைத் 11

## அதிகமாக செலவு செய்தால் உறுப்புரிமை நீக்கப்படும்

### பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வருகின்றது புதிய சட்டம்

(கொழும்பு)

தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கான சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் பிர 11

### வல்லை பாலத்தில்

## தவறிவிழுந்த இளைஞன் மாயம்

(யாழ்ப்பாணம்)

வல்லைப் பாலத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இளைஞரொருவர் தவறி 11

## யாழ்.ஒஸ்மானியா கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் மீது

### பாடசாலைக்குள் புகுந்து மாணவனின் தந்தை தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியர் மீது மாணவனின் தந்தை தாக்குதல் மேற்கொண்டதில் ஆசிரியர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒஸ்மானியா கல் 11

## யாழ்.மாணவர்கள் பாகிஸ்தானில் உயர்கல்வியைத் தொடரலாம்

### யாழில் பாகிஸ்தான் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாணவர்கள் பாகிஸ்தானில் உயர் கல்வியை தொடர்வதற்கு உரிய ஒழுங்குகள் செய்து கொடுப்பதற்கு தயாராக இருப்பதாக இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் உமர் பருக் பர்கி தெரிவித்தார்.

நேற்று யாழ்.மாநகர சபையில் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

## திருமதி அன்னராணி தனேஸ்வரன்

(Spe.Trd Primary, SLTS - I)



வல்வை மகளிரின் வனிதையாய்
வாண்மைமிகு ஆசானாய்
மெல்லியல்புடன் தானுஞ்சிறாராகி
துல்லியமாய்க் கல்விதனை
அள்ளி வழங்கிய எம் ஆசான்
வாழ்க பல்லாண்டு



யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் அளப்பரிய சேவையாற்றி இன்று [23.11.2022] புதன்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியை திருமதி **அன்னராணி தனேஸ்வரன்** அவர்கள் தமது ஓய்வுக்காலத்தில் சகல நலன்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

1. யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
   1992.09.01 - 2003.01.20
2. யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
   2003.01.21 - 2014.01.20
3. யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
   2014.01.21 - 2022.11.23

*வாழ்த்துவோர்:-* ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.

(13532)

# Mathuram Institute

**தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில்
பரீட்சைக்கான மாபெரும் கருத்தரங்கு**

வளவாளர்
பிரபல ஆசிரியர் **திரு B. சதீஸ்** அவர்கள்
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

இடம் : கணேஸ் கலையரங்கம்
(மதுரம் கல்வி நிறுவனம்)

காலம் : 26.11.2022 சனிக்கிழமை முதல் 30.11.2022 புதன்கிழமை வரை பி.ப 6.30 மணி முதல் பி.ப 8.30 மணி வரை

**கருத்தரங்கில்...**

- ☐ முற்றிலும் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்
- ☐ கற்றல் கையேடுகள்
- ☐ நுண்ணறிவு தொடர்பான பூரண விளக்கங்கள்

**நவீன தொழில்நுட்ப முறையில் கருத்தரங்கு இடம்பெறும்.**


இட நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு
உடன் முற்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

(C-5313)

077 912 2918
075 912 2917

மதுரம் கல்வி நிறுவனம்
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(இருபாலைச் சந்திக்கு அருகில்)

# நீங்கா நினைவுகளில் 27 ஆண்டுகள்





அமரர்
**கனகசபை சண்முகசுந்தரம்**
பிறப்பு: 03.11.1941

அமரர்
**சண்முகசுந்தரம் சிவரூபன்**
பிறப்பு: 18.08.1983

**இறப்பு: 23.11.1995**

இறந்தாலும் இன்றுடன் ஆண்டுகள் இருபத்தேழு
மறந்திடோம் உங்களை மண்ணில் கார்த்திகையில்
பிறந்திடும் நினைவுநாளில் பெருமானை வழிபட்டு
உறவுடன் நினைக்கின்றோம் உறங்காச் சோகத்துடன்

29, ஓட்டுமடம் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(C-5311)

தகவல்:
குடும்பத்தினர்

# மணிவிழா நாளில் நினைவு கூருகின்றோம்



## அமரர் பிரபாலினி வரதராஜன்

**(SLTS - I, Primary Trd, B.Ed, M.Ed)**

*மட்டுவில் தந்த மணிவிளக்காம் - எங்கள்
பிரபாலினி வரதராஜன்!
மங்காப் புகழுடன் மணிவிழாக் காணும்
இந்நாளாம் நன்நாளில் இவ்
உலகை விட்டுப் பிரிந்தாலும் உங்கள்
புகழ் இன்னும் மறையவில்லை*

*நீங்கள் விதைத்துச் சென்ற விதைகள்
விருட்சமாய் நிற்குதிங்கே!
மணிவிழாக் காணும் உங்களை
மனமார வாழ்த்திடுவோம்
வையகம் உள்ளவரை
வாழ்ந்திடும் உங்கள் புகழ்*

(C-5306)


எம்முடன் இணைந்து சேவையாற்றி எமை விட்டுப் பிரிந்த பிரபாலினி வரதராஜன் அவர்களின் மணிவிழா தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இணைந்து சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்கள்
யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகருக்கும் யாழ்.மாநகர முதல்வருக்கும் இடையில் சந்திப்பு







(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி யாழ்.மாநகர சபைக்கு நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இதன்போது யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனையும் யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (நி-6)

## வரவு-செலவுத்திட்டத்திற்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்

### முன்னாள் பிரதமர் மகிந்த

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தில் திருத்தங்களுக்கு அமைய அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"ஜனாதிபதி நிதியமைச்சர் என்ற வகையில் வரவு-செலவுத் திட்டத்தில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கப் போவதாக குறிப்பிட்டார்.

அத்தகைய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு நாம் செய்ய வேண்டிய பல நீண்ட கால மற்றும் குறுகிய கால செயற்பாடுகள் உள்ளன. இவை அனைத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் செயல் முறையின் யதார்த்தங்கள், அத்தகைய மூலோபாயத் திட்டத்தில் நாம் நகர்ந்தால் மட்டுமே சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

எனவே நாம் அனைவரும் திருத்தங்களுக்கு உட்பட்டு அதை ஆதரிப்பது முக்கியம் என அவர் தெரிவித்தார். (நி)

## ஆடை குறித்த சுற்றறிக்கை ஆசிரியர்களுக்கு பொருந்தாது

### பொது நிர்வாக அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு அலுவலகங்களுக்கு எளிதான மற்றும் கண்ணியமான உடையில் பணிக்கு வரலாம் என வெளியிடப்பட்ட சுற்றறிக்கை பாடசாலை ஆசிரியர்களுக்கு பொருந்தாது என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசு அலுவலகங்கள் தவிர ஏனைய சேவைகளில் ஈடுபடும் நபர்களுக்கு இந்த சுற்றறிக்கை பொருந்தாது என அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயா துன்னே தெரிவித்துள்ளார்.

சுற்றறிக்கை குறித்து பல தரப்பினரின் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில் பாடசாலைக்கு வசதியான ஆடைகளை அணிவது குறித்து கல்வி அமைச்சு தனது முடிவை அறிவிக்க வேண்டும் என்றும் மாயா துன்னே தெரிவித்தார்.

பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையில் அலுவலக ஊழியர்களுக்கு மட்டுமே ஆடைக் கட்டுப்பாடு பொருந்தும் என தெளிவாக கூறப்பட்டுள்ளது. எனவே ஏனைய சேவைகளில் ஈடுபடும் நபர்களுக்கு இந்த சுற்றறிக்கை பொருந்தாது என அவர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள பல பாடசாலைகளின் ஆசிரியர்கள் புடைவைக்குப் பதிலாக வேறு வசதியான ஆடைகளை அணிந்து நேற்று முன்தினம் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## நாட்டில் 152 மருந்துகளிற்கு தட்டுப்பாடு

### -சுகாதார அமைச்சு தெரிவிப்பு-

(கொழும்பு)

நாட்டில் தற்போது 152 மருந்துகளிற்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தியா, ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய கடன் வசதிகளை பயன்படுத்தி மருந்துகளை பெறுவது நீண்ட நடைமுறையாக காணப்படுவதால் மருந்துகளிற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு வருடகாலத்திற்கு பொருத்தமான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட சுகாதார இராஜாங்க அமைச்சின் செயலாளர் மருத்துவர் எஸ்.ரத்நாயக்க நாட்டில் தற்போது 152 மருந்துகளிற்கு தட்டுப்பாடு நிலவுகின்றன என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

தற்போது இந்தியாவின் கடன்களை பயன்படுத்தி இந்த மருந்துகளை கொள்வனவு செய்ய முயல்கின்றோம்.

இந்தியாவின் கடனுதவியைப் பயன்படுத்தி மருந்துகளை கொள்வனவு செய்ய முயலும் போது அதற்கு திறைசேரியினதும் இந்திய தூதரகத்தினதும் அனுமதி தேவை.

ஆசிய அபிவிருத்தி வங்கி 66.6 மில்லியன் டொலர் கடன் உதவி வழங்கியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் கொள்வனவு செய்யப்படும் மருந்துகள் தொடர்பிலும் நீண்ட நடைமுறையை பின்பற்ற வேண்டியுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

கடனுதவியைப் பயன்படுத்தி மருந்துத் தட்டுப்பாட்டிற்கு இரண்டு மூன்று மாதங்களில் தீர்வை காணமுடியும் என அதிகாரிகள் எதிர்பார்த்தனர். அது சாத்தியமாகவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## வர்த்தக நிலையங்களில் இன்று முதல் சோதனை நடவடிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இன்று புதன்கிழமை முதல் விசேட சுற்றிவளைப்பு நடத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிக விலைக்கு உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களை அடையாளம் காணும் வகையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் விடுமுறை காலத்தை இலக்காகக் கொண்டு எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை இந்த சோதனைகள் இடம்பெறவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வுக்குத் தகுதியற்ற உணவுப் பொருட்களை அதிக விலைக்கு விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் அச்சபை தெரிவித்துள்ளது. (நி)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தம்

### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்தை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் நோக்கில் அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## மனித கடத்தல் வழக்கு

### ஓமானில் உள்ள இலங்கை அதிகாரி பதவி நீக்கம்

(கொழும்பு)

மனித கடத்தல் கும்பலுடன் தொடர்புடையதாக குற்றம் சாட்டப்பட்ட ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்தின் அதிகாரி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்தோடு. அவர் மீது மனித கடத்தல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த நபர் இலங்கை வந்த பின்னர் கைது செய்யப்படுவார் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா, வேல்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் டிரா

கட்டாரில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கால்பந்து தொடரில் நேற்று இரவு நடைபெற்ற பி பிரிவுக்கான லீக் ஆட்டத்தில் அமெரிக்கா, வேல்ஸ் அணிகள் மோதின.



தொடக்கம் முதல் சிறப்பாக ஆடியது அமெரிக்க அணி. முதல் பாதியின் 36 ஆவது நிமிடத்தில் அமெரிக்க அணியின் திமுதி வியா ஒரு கோல் அடித்தார். இதனால் முதல் பாதியில் அமெரிக்கா 1-0 என முன்னிலை வகித்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் 82 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை வேல்ஸ் வீரர் பாலே அபாரமாக கோலாக மாற்றினார்.

இறுதியில், இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 1-1 என்ற கணக்கில் டிராவில் முடிந்தது. (6)

# கப்டன் பதவியிலிருந்து விலகிய நிக்கோலஸ் பூரன்



மேற்கிந்திய தீவுகள் அணி நேரடியாக தகுதி பெறாததால், தகுதிச் சுற்றில் விளையாடியது. ஆனால் சுற்றில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் குரூப் 12 சுற்றுக்கு முன்னேற முடியாமல் ஏமாற்றம் அடைந்தது.

தோல்வி குறித்து ஆராய பிரையன் லாரா உள்ளிட்ட 3 பேர் கொண்டு குழுவினை மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் போர்டு அமைத்துள்ளது.

இந்த நிலையில் இருபது-20 அணி கப்டனாக செயற்பட்ட நிக்கோலஸ் பூரன் தனது கப்டன் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

உலகக் கிண்ணத் தோல்வி மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. எனது முடிவுக்கு இதுதான் காரணம் என பூரன் தெரிவித்துள்ளார். (6)

# ஈரானை பந்தாடியது இங்கிலாந்து

கட்டாரில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கால்பந்து தொடரில், நேற்று கலிபா சர்வதேச ஸ்டேடியத்தில் நடைபெற்ற குருப்-பி முதல் லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து-ஈரான் அணிகள் மோதின.

தொடக்கத்தில் இருந்தே ஆட்டத்தை தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்த இங்கிலாந்து அணி முதல் பாதியில் 3 கோல்களை அடித்து வலுவான முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியிலும் இங்கிலாந்து ஆதிக்கம் செலுத்தியது. இங்கிலாந்து வீரர்களுக்கு பதிலடி கொடுக்க ஈரான் அணியின் வீரர்கள் ஆக்ரோஷமாக முன்னேறினர். போட்டியை எப்படியாவது டிரா செய்து விடவேண்டும் என தொடர்ந்து போராடிய வேளை 65 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் மெஹ்தி கோல் அடித்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இங்கிலாந்து வீரர் மார்கஸ் ராஷ்போர்டு 71 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார்.

போட்டியின் இறுதிக்கட்டத்தில் ஜேக் கிரீலிஸ் (89 ஆவது நிமிடம்) கோல் அடிக்க, இங்கிலாந்து அணி 6-1 முன்னிலை பெற்றது.

கூடுதல் நேரத்தில் ஈரான் வீரர் மெஹ்தி மீண்டும் ஒரு கோல் அடித்தார். இறுதியில் இங்கிலாந்து அணி 6-2 என அபார வெற்றி பெற்றது. (6)

# இலங்கைக்கு வருகை தந்தது ஆப்கானிஸ்தான் அணி

இலங்கைக்கு எதிராக இடம் பெறவுள்ள கிரிக்கெட் தொடரில் பங்கு பற்றவுள்ள ஆப்கானிஸ்தான் அணி நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்துள்ளது.

இலங்கை அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆப்கானிஸ்தான் அணி பங்கேற்று விளையாடவுள்ளது.

நேற்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி எதிர்வரும் 25, 27 மற்றும் 30 ஆம் திகதிகளில் கண்டி பல்லேகல கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ள 3 ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது. (6)






பல்லக்கிற்குள்ளே யாராவது இருக்கிறார்களா; இல்லையா? இல்லையென்றால் சற்று முன்பு கேட்ட கனைப்புச் சத்தமும் வளையல் குலுங்கும் சத்தமும் எங்கிருந்து வந்தன?"

இவ்விதம் வணங்காமுடியார் கேட்டதும் அந்தக் கூட்டத்தில் ஒரு விசித்திரமான நிசப்தம் நிலவிற்று. பலருடைய மனத்திலும் இதேவித எண்ணமும் கேள்வியும் தோன்றியிருந்தபடியால், வணங்காமுடியாரை எதிர்த்துப் பேச யாருக்கும் உடனே துணிவு ஏற்படவில்லை. சம்புவரையரின் உதடுகள் ஏதோ முணுமுணுத்தன. ஆனால் அவர் வாயிலிருந்தும் வார்த்தை ஒன்றும் கேட்கவில்லை.

அந்த நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு பழுவேட்டரையர் கணீர் என்று கூறினார்: "சரியான கேள்வி; மறுமொழி சொல்ல நான் கடமைப்பட்டவன். இந்தக் கூட்டம் கலைவதற்கு முன்னால் உங்கள் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறேன். இன்னும் அரை நாழிகை பொறுத்திருக்கலாம் அல்லவா? அவ்வளவு நம்பிக்கை என்னிடம் உங்களுக்கு இருக்கிறதல்லவா?"

"இருக்கிறது, இருக்கிறது பழுவேட்டரையரிடம் எங்களுக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது!" என்று பல குரல்கள் கூவின.

"மற்றவர்களைக் காட்டிலும் பழுவேட்டரையரிடம் எனக்குப் பக்தியும் மரியாதையும் குறைவு என்று யாரும் எண்ண வேண்டாம். அவர் மனத்தைத் திறந்து கேட்கச் சொன்னபடியால் கேட்டேன்.

மற்றப்படி அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறேன். இந்தக் கணத்தில் என் உயிரைக் கொடுக்கச் சொன்னாலும் கொடுக்கச் சித்தம்!" என்றார் வணங்காமுடி முனையரையர்.

"வணங்காமுடியாரின் மனத்தை நான் அறிவேன். நீங்கள் எல்லோரும் என்னிடம் வைத்துள்ள நம்பிக்கையையும் அறிவேன். ஆகையால் இன்று எதற்காகக் கூடினோமோ அதைப் பற்றி முதலில் முடிவு கொள்வோம். சுந்தர சோழ மகாராஜா நீடூழி இவ்வுலகில் வாழ்ந்து இந்தச் சோழ சாம்ராஜ்யத்தை ஆளட்டும்.

ஆனால் ஒருவேளை ஏதாவது அவருக்கு நேர்ந்துவிட்டால், வைத்தியர்களுடைய வாக்குப் பலித்து விட்டால், சில நாளாகத் தோன்றி வரும் தூமகேது முதலிய உற்பாதங்கள் பலித்து விட்டால், அடுத்தபடி இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்திற்கு உரியவர் யார் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்."

"அது விடயமாகத் தங்கள் கருத்தைத் தெரிவிக்கும்படி கோருகிறோம். தங்களுடைய கருத்துக்கு மாறாகச் சொல்லக் கூடியவர் இந்தக் கூட்டத்தில் யாரும் இல்லை."

"அது சரியல்ல, ஒவ்வொருவரும் சிந்தித்துத் தங்கள் கருத்தை வெளியிட வேண்டும். சில பழைய செய்திகளை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மகா வீரரும் மகா ஞானியும் புண்ணிய புருஷருமான கண்டராதித்ததேவர் யாரும் எதிர்பாராத வண்ணம் இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் காலமானார். அச்சமயம் அவருடைய புதல் வர் மதுராந்தகத் தேவர் ஒரு வயதுக் குழந்தை. ஆகவே தமது தம்பி அரிஞ்சயதேவர் பட்டத்துக்கு வர வேண்டும் என்று திருவாய் மலர்ந்து விட்டுப் போனார். இதை அவருடைய தர்ம பத்தினியும் பட்ட மகிஷியுமான செம்பியன் மாதேவி தான் நமக்கு அறிவித்தார்கள்.

அதன்படியே அரிஞ்சய சோழருக்கு முடிசூட்டி சக்கரவர்த்தி பீடத்தில் அமர்த்தினோம். ஆனால் விதிவசமாக அரிஞ்சய சக்கரவர்த்தி சோழ சிம்மாசனத்தில் ஓர் ஆண்டுக்கு மேல் அமர்ந்திருக்கவில்லை. அரிஞ்சய சோழருடைய மூத்த புதல்வர் பராந்தக சுந்தர சோழர் இருபது வயது இளங்காளைப் பருவம் எய்தியிருந்தார்.

எனவே ராஜ்யத்தின் நன்மையை முன்னிட்டு மந்திரிகளும் சாமந்தர்களும் குறுநில மன்னர்களும் நகரத் தலைவர்களும் கூற்றத் தலைவர்களும் சேர்ந்து யோசித்துப் பராந்தக சுந்தர சோழருக்கு முடிசூட்டினோம். அதைக் குறித்து யாரும் வருத்தப்பட இடமில்லை. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வமதக் குழுவினர் கிளிநொச்சி விஜயம்



(மன்னார்)

மன்னாரில் இருந்து சர்வமத குழு ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள சர்வமதத் தலைவர்களைச் சந்தித்ததோடு, மதஸ்தலங்களுக்கும் விஜயம் செய்தனர்.

மன்னார் கரித்தாஸ் வாழ்வு தயத்தின் ஏற்பாட்டில், இயக்குநர் எஸ்.அன்ரன் அடிகளாரின் ஒருங்கிணைப்பில் மன்னா ரில் இருந்து சர்வமதத் தலைவர்களின் கிளிநொச்சி விஜயம் மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தின் சமய நல்லிணக்கப் பிரிவின் உறவுப்பால நிகழ்வாக அமைந்தது.(6-285)

# மன்னார் மாவட்டத்திற்கான உதவித் தேர்தல் ஆணையாளர் நியமனம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திற்கான உதவித் தேர்தல் ஆணையாளராக வி.சிவராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமேல் முன்னிலையில் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்திற்கான உதவித் தேர்தல் ஆணையாளராக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சிவராஜா மன்னார் மாவட்டச் செயலகத்தில் உதவி மாவட்ட செயலாளராக கடமை யாற்றினார் என்பது குறிப்பிடத் தக்கது. (நி-6-285)

## வணங்குகிறோம்



அமரராகிவிட்ட எமது குருநாதர்

சங்கீத வித்துவான்

A.K.கருணாகரன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

(13540)

நல்லூர், யாழ்ப்பாணம்

கலாபூஷணம் திருமதி.கோகிலமணி ஜெகானந்தராஜா

கலாபூஷணம் திரு.டானியல் வரதராஜன்

## 32 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 - 10 - 1927

இறப்பு 23 - 11 - 1990



யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்தாபகரும் இணைப்பதிகாரியுமாகிய ஓய்வு பெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

அமரர்.

சண்முகம் ஞானப்பிரகாசம்

அவர்களின் சேவையினை நன்றியுடன் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(13526)

276,அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள்,பணியாளர்கள். யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.

## நல்லூர் பிரதேசசபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)


நல்லூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்ட வரைபு வரவு செலவுத் திட்டமானது இன்று முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகம், உப அலுவலகம் மற்றும் பொது நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளது என்பதுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப. மயூரன் அறிவித்துள்ளார். (நி-6)

## சிரார்த்த தினமும் கல்வி ஊக்குவிப்பும்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி அமரர். ஆ.சி. நடராசாவின் 11 ஆவது சிரார்த்த தினமும் கல்வி ஊக்குவிப்பும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு குரும்பசிட்டி கலைவாணி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என குரும்பசிட்டி கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (நி-6)

## துயர் பகிர்கின்றோம்



பிறப்பு-15.06.1956 இறப்பு-12.11.2022

அமிர்தலிங்கம் காண்டீபன்

எங்கள் ராஜு அண்ணா!

உங்கள் நினைவுகள் எங்களை விட்டு ஒருபோதும் அழியாது!

துளசி மீதான உங்களின் அன்பை மறக்கவே முடியாது!

அன்புத் தம்பிகள்

தங்க.முகுந்தன் குடும்பம்

சுகந்தன் குடும்பம், அகிலன் குடும்பம்

மூளாய் 077 7279 238

(க-6308)

# இராசிபலன்

23.11.2022

கார்த்திகை 07 , புதன்கிழமை

சதுர்த்தசி காலை 6.36 மணிவரை

அமாவாசை பின்னிரவு 5.07 மணிவரை

விசாகம் முன்னிரவு-10.27 மணிவரை

சுபநேரம் -4.41-6.11 மணிவரை

இராகுகாலம் -12.11-1.41 மணிவரை

அமாவாசை விரதம்

சாயி பாபா பிறந்த தினம்

சந்திராஷ்டமம்

அச்சுவினி,பரணி

வளவன்

**மேஷம்** — குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு,உடல் நலன் சீராகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**கடகம்** — புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**துலாம்** — தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்** — ஆடம்பரப் பொருட்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பாராத நேரத்தில் பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**ரிஷபம்** — உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழித் தகவலால் மகிழ்ச்சியடைவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**சிம்மம்** — சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், தேவையற்ற மனச் சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கும்பம்** — நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உடல் நலன் சீராகும், தொலைபேசி வழித் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்** — உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள்.

**கன்னி** — திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** — தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மீனம்** — வரவும் செலவும் சமமாகும், விரயங்கள் மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

நல்லொழுக்கம் என்பது உனக்கு நீயே அளித்துக் கொள்ளும் நன்மதிப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளான நேற்று முன்தினம் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக சாவகச்சேரி பிரதேச சபையின் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர், மாவீரர்களின் உறவுகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (படம்-சுபேசன்)

# யாழ். செம்மணி இந்து மயானத்தை நவீனமயமாக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் என மூன்று பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட நான்காயிரம் வரையிலான பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள செம்மணி இந்து மயானத்தை நவீனமயப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செம்மணி இந்து மயானத்தை துப்புரவு செய்யும் பணியில் நேற்று செவ்வாய்க்கிழமை மயான அபிவிருத்தி சபையினர் ஈடுபட்டனர்.

குறித்த துப்புரவு பணியின் பின்னர் செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபையின் தலைவர் சி.இலட்சுமிகாந்தன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இந்த கோரிக்கையை விடுத்தார்.

மேலும் அந்த கோரிக்கையில், இதுவரை விறகையே எரிபொருளாகக் கொண்டு இம் மயானம் இயங்கிவரும் நிலையில் தற்போது சூழலைப் பாதுகாக்கும் பொருட்டும் மரங்களை வெட்டுவதை நிறுத்தும் பொருட்டும் விறகுகளின் நாளாந்த விலையேற்றத்தைக் கணக்கிலெடுத்தும் செம்மணி மயானத்தில் மின் தகன மேடையை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

குறித்த திட்டத்திற்கு இந்த மயானத்தை பயன்படுத்தும் பொதுமக்கள் தங்களாலான பங்களிப்பை வழங்க வேண்டும் என அபிவிருத்தி சபையினர் கேட்டுள்ளனர். (நி-6-33)

# மானிப்பாய் பகுதியில் சிலிண்டர்கள் திருட்டு

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்த எரிவாயு சிலிண்டர் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை திருடப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதுமலை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து எரிவாயு சிலிண்டர் ஒன்று திருட்டு போயுள்ளது.

துவிச்சக்கர வண்டியில் வந்த ஒருவர் குறித்த வீட்டிற்குள் நுழைந்து சிலிண்டரை திருடிச் சென்றது அருகில் உள்ள சி.சி.டி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

இச்சம்பவங்கள் குறித்து பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சி.சி.டி.வி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-104)

# வடமராட்சியில் 9 வீடுகளில் திருட்டு சந்தேகநபர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் தொடர் களவுச் சம்பவங்களில் தொடர்புபட்ட இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடமராட்சி துன்னாலை பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞர் ஒருவரே குறித்த களவுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

வடமராட்சிப் பகுதியில் உள்ள சுமார் 9 வீடுகளில் உட்புகுந்து களவாடியுள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி-6-60)



ஊரெழு தலைவாணி முன்பள்ளிச் சிறுவர்களின் கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் ஊரெழு-வீரகத்தி விநாயகர் மணிமண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், விளையாடி மகிழ்வோம் செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வாகன வருமான வரி மற்றும் உடைமை மாற்றக் கட்டணம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வாகன வருமான வரி மற்றும் உடைமை மாற்றக் கட்டண அதிகரிப்பு தொடர்பாக அண்மையில் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 2306/02 இற்கு அமைய மோட்டார் வாகன வருமான வரி தொடர்பாக இதுவரை அறவீடு செய்யப்பட்டு வந்த கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

அதற்கமைய நேற்று முன்தினம் முதல் வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்படும் வாகன வருமான வரிப்பத்திரங்கள் அதிகரிக்கப்பட்ட கட்டணங்களுக்கமையவே வழங்கப்பட்டு வருவதாக வடமாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் திருமதி.சி.சுஜீவா அறிவித்துள்ளார். (நி-6)

## ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அவதார தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 97 ஆவது அவதார தின விழா இன்று புதன்கிழமை காலை யாழ்.சத்திய சேவா நிலையத்தில் இடம்பெறும். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 190 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 140 | 200 | 160 |
| தக்காளி | 350 | 340 | 350 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 180 | 150 |
| கோவா | 300 | 250 | 300 | 280 |
| கரட் | 300 | 400 | 480 | 480 |
| பூசணி | 120 | 160 | 140 | 150 |
| புடோல் | 250 | 300 | 180 | 250 |
| வாழைக்காய் | 160 | 150 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 550 | -- | 580 | 800 |
| பெரிய வெங்காயம் | 280 | 280 | 280 | 280 |
| பாகற்காய் | 500 | 500 | 450 | 600 |
| வெண்டிக்காய் | 160 | 140 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 380 | 600 |
| லீக்ஸ் | 400 | 350 | 400 | 450 |
| பீற்றூட் | 280 | 300 | 250 | 350 |
| கறிமிளகாய் | 650 | 750 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 600 | 800 |
| போஞ்சி | 400 | 400 | 430 | 480 |
| கத்தரிதம்புள்ள | 380 | 250 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 140 | 180 | 200 | 200 |
| தேசிக்காய் | 400 | 300 | 350 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 250 | 250 | 280 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 400 | 520 |
| முள்ளங்கி | 160 | 140 | 160 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 30 | -- | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 140 | 120 | 120 |

# இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்ட குடிநீர்க் குழாய்

(கரணவாய்)

கரணவாய் செல்வாபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் காலை குடிநீர் வழங்குவதற்காக சென்றபோது செல்வாபுரம் மதவுக்குக் கீழ் இருந்த குடிநீர்க் குழாய் கற்களால் உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

உடனடியாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து குடிநீர் பிரச்சினை சீர் செய்யப்பட்டது. (நி-6-60)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடைமுறைப்படுத்தும் "எழுத்தாளர் ஊக்குவிப்பு வட்டம்" ஒன்றினை உருவாக்கும் நோக்கில் எழுத்துத் துறையில் ஈடுபட்டு வரும் ஆர்வமுள்ள எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறித்த விண்ணப்பப் படிவங்களை தங்களது பிரதேச கலாசார உத்தியோகத்தர்களிடம் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் செம்மணி வீதி கல்வி அமைச்சு பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பிரதிப் பணிப்பாளர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# சாவகச்சேரிப் பகுதியில் குடிமனைக்குள் புகுந்த முதலை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி கற்குளி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை குடிமனைக்குள் புகுந்த முதலை ஒன்றை பிரதேச மக்கள் இணைந்து உயிருடன் மீட்டு உரிய திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

அருகில் உள்ள நீர்த் தேக்கத்தில் இருந்த முதலையே இவ்வாறு குடிமனைக்குள் புகுந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி-6-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பினால் உலகை வாழ வைக்க அவதாரம் எடுத்த பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா

ஞானத்தின் திருவுரு கருணைக் கடல் எல்லாம் வல்ல ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அவதார தினம் இன்றாகும். 1926 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் இருபத்து மூன்றாம் திகதி வியாழக் கிழமை ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தி என்னும் கிராமத்தில் அவதரித்தார்.

பகவானின் அவதாரத்தின் நோக்கம் மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதாகும். எங்கே நம்பிக்கை இருக்கிறதோ அங்கே அன்பு இருக்கிறது. அன்பு எங்கே இருக்கிறதோ அங்கே சத்யம் இருக்கிறது. சத்யம் இருக்கும் இடத்தில் இறைவன் இருக்கின்றார். இறைவன் இருக்கும் இடத்தில் ஆனந்தம் நிறைகின்றது என அருளுகின்றார் பகவான்.

இன்றைய உலகம் அணுகுண்டையும் விரும்புகிறது. அமைதியையும் விரும்புகிறது. ஒன்று தலையெடுத்தால் ஒன்று தலை சாய்ந்துவிடும். அதேபோல் ஆணவம் உண்டானால் அன்பு மறைந்து விடும். நாம் அடுத்தவரிடம் அன்பைக் காட்டினால் தான் அதன் பிரதிபலன் நமக்குத் தோன்றும்.

பகவான் எப்போதும் உபதேசம் செய்வது உனது இயல்பான அன்பை மூலதனமாக்கு. அன்பில்லா மனிதன் பிணத்துக்குச் சமமாவான். கொழுந்து விட்டெரியும் நெருப்பிலும் புகையுண்டு. சான்றோர் வாழ்விலும் குறையுண்டு. நமக்கு நெருப்புத்தான் தேவை. புகையல்ல.

சகல மதங்களும் சாற்றும் அன்பையே அடுத்தவரிடம் பரிமாறு என்கிறார் பகவான். பாத்திரம் சுத்தமானால் பால் பழுதடையாது. அதேபோன்று உள்ளமும் கள்ளம், கபடம், வஞ்சகம் சூது, வாது, பொறாமை இல்லாது தூய்மையாக இருக்குமானால்



இறைவன் தானே வந்து குடியிருப்பான். உள்ளத்தை ஊனமாக வைத்துக் கொண்டு இறைவனை வணங்கி பின் தனக்கு வரும் துன்பங்களை நான் வணங்கும் தெய்வம் நீக்க உதவவில்லையென்று ஆதங்கப்படுவதும் அவதூறு சொல்வதும் தன்னை உணராது, தான் எப்படிப்பட்டவர் என பிரித்தறியாது ஆகம விதி கருதி இறைவனை வணங்குவதால் எவ்விதப் பிரயோசனமுமில்லை.

காலையில் எழுந்து இறைவனை வணங்கி தனது வாழ்வு, தான் சார்ந்த குடும்பம், செய்யும் தொழில் சிறக்க வேண்டுதல் முறையாகும். தவிர அடுத்தவர் காலை வாருதல் எவ்வாறு என்றெண்ணி இறைவணக்கம் செய்தல் ஒருபோதும் துணை புரியாது.

உள்ளத்தை தூய்மையாக வைத்து எல்லாம் வல்ல சாயி நாதனின் மகா சக்தி பொருந்திய சாயிராம் என்னும் சொல்லை அழையுங்கள். உங்கள் முன்வந்து நிற்பார் பகவான்.

முன்வந்து நிற்பார் பகவான் என்றால் எந்த வடிவத்திலும் வருவார். எதை வேண்டி அழைத்தீர்களோ அது தானாக நிறைவேறும். பகவானை நினைக்கும் வேளை கோயில் மணி ஓசை மாத்திரமல்ல பக்கத்து வீட்டிலோ, வீதியிலோ இரும்புத்துண்டு விழுந்தெழும் ஓசையாவது கேட்கும். வாசனை பொருந்திய நறுமணமாவது எமக்கு முன்னால் காற்றுடன் கலந்து செல்லும். இதை வைத்து சத்ய சாயி மாதாஎம்முடன்இருக்கின்றார் என்றெண்ணி மகிழலாம்.

பகவானே அருளுகின்றார் என்னை வணங்கும் போது உன்னுடைய இஷ்ட தெய்வங்களுக்கு முன்னால் சாயி விநாயகா என்றோ, சாயி இயேசு என்றோ, சாயி அல்லா என்றோ வணங்குங்கள். என்னுடைய அருட்கடாட்சம் உங்களுக்குக் கிட்டும். பகவான் தனக்கென ஒரு மதத்தை சார்ந்திருக்கவில்லை. சகல மதமும் தன் மதமென அருளுகின்றார்.

பகவானால் அரிய பெரிய தர்ம சத்திரங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், குடிநீர் விநியோகங்கள் யாவும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. பகவானின் அவதாரம் என்பது அர்த்தநாரீஸ்வரர் நிலையாகும். எந்நேரமும் சாந்த குணமாகவே காணப்படுவார்.

பகவானின் முதல் அவதாரமான சீரடி பகவான் சற்று சிவ உக்கிர வடிவமாகக் காணப்படுவார் என்பார்கள். மனித குலத்தை கள்ளம், கபடம், வஞ்சகம், பொறாமை இல்லா உலகமாக்க வேண்டுமென்பதே சீரடியினதும் புட்டபர்த்தியினதும் நோக்கமாகும்.

பகவான் அருளுகின்றார் நீயும் கடவுள் தான். ஆனால் உன்னை உன்னால் உணர முடிவதில்லை. என்னை என்னால் உணர முடிகிறது.

மனிதனும் இறைநிலை எய்தலாம். ஆனால் இறைவனின் சக்திக்கு ஒப்பாக மாயை என்னும் சாத்தானின் நிலையும் எம்மை ஆட்டுகின்றது. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை மூன்றும் மனித வாழ்வின் இயல்பானது. ஆனால் மாயையினால் அவை ஒழுக்க வழி அகற்றப்பட்டு ஆசைகள் பல வழியில் பிரிந்து வஞ்சகம், பொறாமை மிகுவாக உருவாகி அடுத்தவரின் கண்ணீருக்கு பாத்திரமாக வைக்கின்றது. இதிலிருந்து நீங்குவதற்கே பகவானின் அவதாரம் உருவானது.

பகவானை முழுமையாக நம்புங்கள். ஒரு கிணற்றை கடக்க முற்படும் போது முழுமனதுடன் கடக்க வேண்டும். அரை மனதுடன் கடக்க முற்பட்டால் கிணற்றுக்குள் விழ வேண்டி ஏற்படும். அதேபோன்று பகவானை முழுமையாக நினையுங்கள். சகல சௌகரியங்களும் உங்களை வந்தடையும்.

எல்லாம் வல்ல சாயி பகவான் 2011.04.24 ஆம் திகதி தனது 85 ஆவது அகவையில் இறை சமாதியடைந்தார். அவருடைய அருள் அதிர்வுகள் இன்னும் நடந்த வண்ணமேயுள்ளன.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் திருவருள் உலக மக்கள் அனைவருக்கும் வளம் மிகுந்த வாழ்வை அருள்புரிய வேண்டுமென்று, என் வாழ்வில் எனக்கே புரிந்தும் புரியாமலும் எண்ணில் அடங்கா அற்புதங்களைச் செய்து அடியேனை தன் அடியவனாக்கி இன்றுவரை தன்னையே நோக்க வைத்த சாயி மாதாவை இறைஞ்சுகின்றேன்.

- யாதவகுலசிங்கம் -

## யாழ்.வலய மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு நிகழ்வு



(அராலி)

யாழ். வலய மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பொது மண்டபத்தில், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் தலைமையில் நடை பெற்றது.

குறித்த கன்னி அமர்வில், வலய மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகள் சத்தியப்பிரமாணம், சபாநாயகர் தெரிவு, சபாநாயகர் சம்பிரதாயபூர்வமாக சபைக்கு அழைத்து வரப்படுதல், அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம், அமைச்சுக்களின் அறிமுகமும் முன்வைப்புகளும், சபாநாயகர் பாராளுமன்றத்தை நிறுவுதல் ஆகியன இடம்பெற்றிருந்தன.

வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.பாலராஜ், வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.சுபாகரன், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் எம். நிமலநாதன், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-6-33-104)

## அனுமதியின்றி வெட்டிய காட்டுத்தடிகளுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கல்மடுநகர்ப் பகுதியில் பெறுமதிமிக்க காட்டுத் தடிகளை ஏற்றி பயணித்த டிப்பர் வாகனம் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

கல்மடுநகர் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் நேற்று அனுமதி இன்றி அரச காட்டுக்குள் இருந்து பெறுமதிமிக்க காட்டுத்தடிகளை வெட்டி ஏற்றி டிப்பர் வாகனத்தில் யாழ்ப்பாணம் கொண்டு செல்கையில் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து டிப்பரை சோதனை இட்ட பொழுது பெறுமதிமிக்க காட்டுத்தடிகள் மீட்கப்பட்டன.

டிப்பர் வாகனத்தையும் சாரதியையும் சம்பவ இடத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இன்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-6-316)



உரும்பிராய் தெற்கு.ஞானவைரவர் கோயிலடி ஆர்.டி.எஸ் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போஷாக்கு விழிப்புணர்வு கண்காட்சி நிகழ்வில் யாழ். தாய் சேய்நல மருத்துவ அதிகாரி A.ஜெயகுமரன், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.


## பெயர் மாற்றம்

கௌதாரி முனையில் வசிக்கும் புகழேந்தி ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் விஜய் என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயகக் குடியரசின் கீழ் வாழும். மக்கள் அனைவருக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

விஜய்

(13537)

## நல்லூர் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் (வரைபு) - மக்கள் பார்வைக்கு

நல்லூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரைபு வரவு செலவுத் திட்டமானது "1987ஆம் ஆண்டு பிரதேச சபைச் சட்டத்தின் 15ஆம் இலக்க 168 ஆம் பிரிவிற்கமைய" தயாரிக்கப்பட்டு, 23.11.2022 தொடக்கம் 29.11.2022 ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகம் உப அலுவலகம் மற்றும் பொது நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளது என்பதுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ப.மயூரன்
தவிசாளர்,நல்லூர் பிரதேச சபை.

(சி-5310)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேசசபை - சாவகச்சேரி
## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2023

2023 ஆம் ஆண்டுக்கான கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் வழங்குவதற்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 23.12.2022 வரை அலுவலக நாட்களில் விண்ணப்படிவங்களை ரூபா 1000.00 மற்றும் பொருத்தமான வரிகளை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு விண்ணப்ப படிவமும் அத்திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. **பொருள்களை வழங்குதல் (பொது)**
A1. காகிதாதிகள், எழுதுபொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள்
A2. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு)
A3. கணணிகள் மற்றும் கணணியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம், இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள்.
A4. பதாதைகள் அமைத்தல், யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள்.
A5. நீர்க்குழாய்கள், குழாய் இணைப்புகள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள்.
A6. கட்டட இரும்பு பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் காட்வெயர் பொருட்கள்
A7. கற்கள், மணல்
A8. மின்சார பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்குமிழ்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்கள்.
A9. வளிச்சீராக்கி இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி உட்பட்ட இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு
A10. தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் அழுக்கு நீக்கிகள், கிருமி நாசினிகள், வாசனைத்திரவியங்கள் மற்றும் ஏனையவை.
A11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப், மின் கீலங்கள் மற்றும் ஏனையவை
A12. எரிபொருட்கள், உராய்வு நீக்கி
A13. தோல் உற்பத்தி பொருட்கள், சப்பாத்துக்கள், மழைக்கவசம், பாதுகாப்புக் கவசங்கள்
A14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள், பனை மரங்கள், சலாகைகள்.
A15. இறப்பர் முத்திரைகள்
A16. நூலகங்களுக்கான நூல்கள்.
A17. சித்த மருத்துவ மருந்துகள்
A18. மருத்துவ உபகரணங்கள்
A19.மரக்கன்றுகள், நாற்றுக்கள் தொடர்பான பொருட்கள்
A20. அலுமினிய பிற்றிங்குடன் தொடர்பான பொருட்கள்
2. **சேவை விபரம்.**
B1. உருக்கு மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல்.
B2. மின் உபகரணங்கள் திருத்தம் மற்றும் சேர்விஸ் செய்தல்.
B3. மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள், ஜெனரேற்றர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும்.
B4. கணணிகள், அச்சிடும்பொறி(printers), நிழற்பட பிரதி பழுது பார்த்தலும் சேர்விஸ் செய்தலும்
B5. கட்டட திருத்த வேலை, உள்ளக தொலைபேசி பராமரித்தல்
B6. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
B7. ஓட்டு வேலைகள், உலோக வேலைகள்.
B8. பதாதைகள் அமைத்தல், விளம்பரப்பலகைகள், வீதிப்பெயர்ப்பலகைகள் அச்சிடுதல்
B9.பதிப்பக வேலை, அச்சிடுதல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
B10.கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
B11. கோலவுடை தைத்தல்
B12. சுத்திகரிப்பு சேவை
B13. பாதுகாப்பு சேவை
B14. உள்ளக தொலைபேசி மற்றும் இணைய இணைப்பு பராமரிப்பு
B15. வளிச்சீராக்கல் பழுது பார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
3. **வாகனத்திருத்தமும் சேர்விஸ் செய்தலும்**
C1. சகல விதமான வாகன திருத்தமும், வாகன உட்பக்கம், சீற்கவர் என்பவற்றுக்கான குசன் வேலைகள்.
C2. சகல விதமான வாகனங்களும் சுத்திகரிப்பு செய்தல்.
4. **ஒப்பந்தகாரர் பதிவு செய்தல்.**
D1. கட்டட நிர்மாணமும் திருத்தமும்
D2. வீதிகள் நிர்மாணமும் திருத்தமும்
D3. வர்ணம் பூசுதல்
5. **உணவு வகைகள்**
E1. சமைத்த உணவு, சிற்றுண்டி வகைகள்
E2. குளிர்பான வகைகள், குடிநீர் போத்தல்கள்


**நியந்தனைகள்**
1.வழங்கல்கள்/சேவைகள் 2023 ம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2.ஒவ்வொரு உருப்படிகளிற்கும் தனித்தனியாக கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.
3.பதிவுசெய்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவை ஏற்படின் அதற்கு புறம்பான வழங்குநர்களிடமும் விலைமனுக்களை கோரி உரிய நடைமுறைகளின் பிரகாரம் பொருட்களை கொள்வனவு செய்யும் உரிமையும் பிரதேசசபைக்கு உண்டு.
4.ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்வதற்கு பின்வரும் விடயங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- இக்ராட் பதிவு உடையவராக இருத்தல்.
- பதிவின் போது இக்ராட் பதிவு புத்தகம் சமர்ப்பிக்க வேண்டும்.
- பதிவின் போது இக்ராட் பதிவுத் திகதி காலாவதியற்றதாக இருத்தல் வேண்டும்.
- செய்யப்பட்ட வேலைகளின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

5.விண்ணப்பங்களை கடித உறையின் இடது பக்க மூலையில் **"வழங்கல் சேவைகளிற்கான விண்ணப்பம்-2023"** எனக்குறிப்பிட்டு **"தவிசாளர் / செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை , கொடிகாமம்"** என்னும் முகவரிக்கு 23.12.2022 திகதிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்
6.விண்ணப்பங்கள் 23.12.2022 மாலை 4.15 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
7.மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் 021 205 0356 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**க.வாமதேவன்**
**தவிசாளர்,**
**பிரதேசசபை - சாவகச்சேரி.**

(c-5307)


# இந்தோனேசிய நிலநடுக்கம் உயிரிழப்பு 162 ஆக உயர்வு



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பூகம்பத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 162 ஆக அதிகரித்துள்ளது.

ஜாவா தீவில் இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து 100 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சியான்ஜுர் நகருக்கு அருகில் 5.6 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டது.

இப்பூகம்பத்தினால் 162 பேர் உயிரிழந்துள்ளதுடன் 2000 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் ஜாவா ஆளுநர் ரித்வான் காமில் தெரிவித்துள்ளார். அத்துடன் சுமார் 700 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கட்டட சிதைவுகளுக்கு மத்தியில், உயிர் தப்பியவர்களை தேடும் நடவடிக்கை நேற்று செவ்வாய்க் கிழமையும் தொடர்ந்தது. (நி)

# சீன தொழிற்சாலையில் தீ 36 பேர் உயிரிழப்பு

(பியாங்யாங்)

சீனாவின் ஹெனான் மாகாணத்தில் இரசாயன தொழிற்சாலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 36 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்திய சீனாவின் ஹெனான் மாகாணத்தில் வென்ஹாங் மாவட்டத்தில் உள்ள இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் ஏராளமான இரசாயனப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டிருந்த இடத்தில் திடீரென தீப்பற்றியுள்ளது. இரசாயனப் பொருட்கள் இருந்ததால் தீ பரவி தொழிற்சாலை முழுவதும் பற்றி எரிந்துள்ளது.

இந்த விபத்தில் தொழிற்சாலைக்குள் இருந்த 36 பேர் உயிரிழந்ததாகவும் 2 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் மேலும் இரண்டு பேரை காணவில்லை எனவும் மாவட்ட நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (நி)

# வெடித்து சிதறும் ரஷ்ய எரிமலைகள்



(மொஸ்கோ)

பூகம்பத்தால் ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தில் உள்ள இரண்டு எரிமலைகள் வெடித்து ஒளிரும் எரிமலைக் குழம்புகளை வெளியேற்றி வருகின்றன. மேலும் பெரிய வெடிப்புகள் வரக்கூடும் என்று விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

மொஸ்கோவிற்கு கிழக்கே சுமார் 6,600 கிலோ மீற்றர்கள் தொலைவில் பசுபிக் பெருங் கடலில் பரவியுள்ள ஒரு தீபகற்பம், உலகின் மிகவும் செறிவான பகுதிகளில் ஒன்றாகும். அதே நேரத்தில் இங்கு சுமார் 30 ஆக்டிவ் வல்கனோ என்று சொல்லப்படும் வெடிக்கும் இளம் எரிமலைகள் உள்ளன.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமையன்று ஏற்பட்ட வலுவான பூகம்பத்தால் இங்குள்ள இரண்டு எரிமலைகள் உயிர் பெற்றுள்ளன. பூகம்பத்தால் ஏற்பட்ட புவியியல் மாற்றம் பூமிக்கு அடியில் உள்ள வெப்பகுழம்புகளை எரிமலை வழியாக வெளியேற்ற ஆரம்பித்துள்ளது.

இந்த எரிமலையில் தற்போது ஒரு மணி நேரத்திற்கு 10 வெடிப்புகள் பதிவு செய்யப்படுவதாக ரஷ்ய அறிவியல் அகாடமியின் வல்கனாலஜி துறை தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கள் மகத்தான பணியைச் செய்யப்
பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.
– *விவேகானந்தர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நடுவர் இல்லாத பட்டிமன்றம் இலங்கையில் நடக்கிறது

பட்டிமன்றம் இயல் தமிழில் இரசனைக் குரிய இடம்.

பட்டிமன்றம் என்றால், அறிஞர்கள் கூடி வாதிடும் இடம் என்று பொருள் உரைப்பர்.

வாதம் என்று வந்துவிட்டால் அங்கு ஈர்ப்பு ஏற்பட்டு விடுகிறது.

அதிலும் ஒரு விடயப் பொருளை எடுத்து அதுபற்றி வாதப் பிரதிவாதங்களை முன் வைக்கும்போது, அது கேட்போரின் ஆர்வத் தைத் தூண்டும்.

எதுவாயினும் வாதப் பிரதிவாதங்களைச் சீர்படுத்தி தீர்ப்பை வழங்குவதற்கு நடுவர் மிக வும் முக்கியமானவர்.

நடுவர் இல்லாத பட்டிமன்றம் ஒன்றைக் கற்பனை செய்து பாருங்கள். நிலைமை எப் படியிருக்கும் என்று.

ஆக, விவாதம் செய்வோரைக் கட்டுப்படுத்த வும் விவாதத்தில் இருக்கக்கூடிய தர்க்க ரீதியான நியாயங்களை வலியுறுத்தவும் நடுவர் அவசியமாகின்றார்.

இதை நாம் கூறும்போது இது எதற் கானது? என்று நீங்கள் கேட்கலாம்.

ஆம், இலங்கையில் இப்போது நடுவர் இல்லாமல் ஒரு பட்டிமன்றம் தொடங்கியுள் ளது.

ஒரு தரப்பில் ஆட்சியாளர்கள். மறுதரப்பில் தமிழ் அரசியல் தரப்புகள்.

ஆட்சியாளர்கள் தரப்பிலான அணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைவர்.

தமிழர் தரப்பில் இன்னமும் தலைவர் யார் என்பதை இனங்காண முடியவில்லை.

இதை நாம் கூறும்போது பட்டிமன்றத்தின் தலைப்பு என்ன என்பதை அறிகின்ற உங் களின் ஆர்வம் தெரிகிறது.

**இனப் பிரச்சினைக்கான தீர்வு** என்பதே விவாதப் பொருள்.

இதோ! விவாதம் ஆரம்பித்து விட்டது.

**ரணில்: (ஆளுந்தரப்பு)** எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப்பிரச் சினைக்குத் தீர்வு காணப்படும்.

**கஜேந்திரகுமார்: (தமிழர் அணி)** சமஷ்டி என்ற தீர்வு இல்லையேல் நாம் பேச மாட்டோம்.

**சுமந்திரன்: (தமிழர் அணி)** பேசுவதற்கு நாம் தயார்.

**ரணில்: (ஆளுந்தரப்பு)** அடுத்த சுதந்திர தினத் தில் நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகளாக இருப்போம்.

**சிறீதரன்: (தமிழர் அணி)** சமஷ்டி அடிப்படை யில் பேச்சு நடத்தப்பட வேண்டும்.

**விஜயதாச: (ஆளுந்தரப்பு)** தமிழ் அரசியல் வாதிகளே நீங்கள் ஒன்றுபடுங்கள்.

**ரணில்: (ஆளுந்தரப்பு)** தமிழ்க் கட்சிகளுடன் பேச நான் எந்நேரமும் தயார்.

**சுமந்திரன் (தமிழர் அணி)** இனப் பிரச்சினைக் குத் தீர்வு காண நாம் முழு ஒத்து ழைப்பு வழங்குவோம்.

**பொதுமக்கள்:** நடுவர் எங்கே? நடுவர் எங்கே? இரண்டு அணிகளையும் பேச வையுங்கள். உங்கள் தீர்ப்பை உடனடியாக வழங்குங்கள்.

**அசரீரி:** ஸ்ரீமான் பொதுஜனங்களே இது நடு வர் இல்லாத பட்டிமன்றம். பேசுவோம்... பேசுவோம்... தீர்ப்போம்... தீர்ப்போம்...

இப்படியே இந்தப் பட்டிமன்றம் முடிவிலியாகத் தொடரும்.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு மக்களுக்கு விசேட வாய்ப்புகள்
### *அரசாங்கம் தீர்மானம்*

(கொழும்பு)

75ஆவது சுதந் திர தினத்தை முன்னி ட்டு பொதுமக்களுக்கு சில விசேட வாய்ப்பு களை வழங்க அரசா ங்கம் தீர்மானித்துள் ளது.

இதன்படி, சுதந்திர தினமான அடுத்த வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதி தேசிய பூங் காக்கள், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு பூங் காக்கள் உள்ளிட்ட இட ங்களை இலவச மாக பார்வையிட பொதுமக் களுக்கு வாய்ப்பு வழ ங்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொட ர்பாக நேற்று முன் தினம் நடந்த அமைச் சரவை கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

அத்துடன், பொது மக்கள் திரைப்படம் பார் க்கும் வாய்ப்பை வழ ங்கும் வகையில், எதிர் வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளில் நுழைவுச்சீட்டுக் கட்ட ணத்தை 50 வீதத் தால் குறைக்கவும் அமைச்சரவை அனு மதி வழங்கியுள்ளது.

இந்த விடயங்கள் தொட ர்பாக ஜனாதி பதியினால் முன்வைக் கப்பட்ட யோசனைகளு க்கே இவ்வாறு அமை ச்சரவை அனுமதி வழ ங்கியுள்ளது. (நி)

## சிறுப்புலம் முருகனுக்கு புதிய இராஜகோபுரம்

(மண்டைதீவு)

மண்டைதீவு சிறுப் புலம் முருகன் ஆலய த்திற்கு புதிய இராஜ கோபுரம் அமைப்பதற் கான பூமி பூசை நாளை வியாழக்கி ழமை காலை 7.00 மணிமுதல் 9.00 மணி வரையுள்ள சுப நேரத் தில் இடம்பெறும். அன் றையதினம் ஆலய சுற் றுப்பிரகாரம் அமைப்ப தற்கான வேலைகளும் ஆரம்பித்து வைக்கப்ப டவுள்ளன. (ம)

## சுமார் 78 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

முகத்துவாரம் மற்றும் களுபோவில ஆகிய பகுதி களில் முன்னெடுக்கப்ப ட்ட சுற்றிவளைப்புகளின் போது ஒருதொகை போதை வில்லைகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

கொழும்பு வடக்கு குற்ற விசாரணைப் பிரிவின ரால் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் 78,700 போதை வில் லைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட் டதாக பொலிஸார் தெரி வித்தனர். சந்தேகநபர் இந்த போதைப்பொருள் தொகையை சட்டவிரோ தமான முறையில் வான் மற்றும் கடல் மார்க்கமாக கொண்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்த னர். (நி)

## சிறுவர்கள் இடையே அதிகரிக்கும் வைரஸ் காய்ச்சல்- மருத்துவர் தீபால்

(கொழும்பு)

சிறு குழந்தைகளி டையே வைரஸ் காய்ச் சல் அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிட் ஜ்வே சிறுவர் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

எனவே, பெற்றோர் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமென அந்த மருத்துவ மனை யின் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

குழந்தைகளுக்கு நுரை யீரல் தொடர்பான நோய் நிலைமையும் அதி கரி த்து வருவதாகவும் அத் து டன் சிறார்களுக்கு இன் பு ளுவென்சாவுக்கு இணை யான புதிய நோய் பரவி வருவதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

அந்த வைரஸ் தொற் றுக்கு உள்ளாகும் சிறார் களுக்கு காய்ச்சல், தலை வலி, தடிமன், தும்மல், உடல்வலி, வாந்திபோன்ற நோய் அறிகுறிகள் காண ப்படும் எனவும் அவர் தெரி வித்துள்ளார். (நி)

## சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் தங்க நகை திருட்டு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மறவன் புலவு கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு ஆறரைப் பவுண் நகை திருடப்பட்டிருப்பதாக சாவ கச்சேரிப் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரவு 11 மணியளவில் வீட்டுக் காணிக்குள் கட் டப்பட்டிருந்த மாடு கத்தும் சத்தம் கேட்டு வீட்டில் இருந்தவர்கள் வெளியே றிய சமயம் கொள்ளை யர்கள் வீட்டுக்குள் புகுந்து 5 பவுண் தாலிக்கொடி மற் றும் ஒன்றரைப் பவுண் சங்கிலி ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த திருட்டுத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவக ச்சேரிப் பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## மன்னாரில் கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது

(மன்னார்)

மன்னார் - வெள்ளா ங்குளம் பகுதியில் 7 மில்லியன் ரூபா பெறு மதியான கேரள கஞ்சாவு டன் இரண்டு பேர் கடற் படையினரால் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கைது செய்யப்பட் டுள்ளனர்.

மன்னார்-யாழ் பிர தான வீதி வெள்ளாங் குளம் வீதித் தடுப்பில் சந்தேகத்திற்கிடமான லொறி ஒன்றை மறித்து சோதனையிட்டதில் லொறியில் இருந்து சுமார் 24 கிலோ 200 கிராம் கேரள கஞ்சா அடங்கிய 12 பொதிகள் மீட்கப்பட்டு ள்ளன.

இதன்போது வவுனி யாவைச் சேர்ந்த 37 மற் றும் 45 வயதான இர ண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர்.

சந்தேகநபர்கள் லொறி யுடன் இலுப்பைக்கடவை பொலிஸாரிடம் ஒப்படை க்கப்பட்டுள்ளனர்.

இலுப்பைக்கடவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-7,285)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற் றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளைவியாழ க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** வல் லான், ஆலடி சந்தி, இறுப்பிட்டி, கேணதீவு, குறிகட்டுவான், மடத்து வெளி, நடுவுக்குறிச்சி, புங்குடுதீவு, அரசடி சந்தி ஆகிய இடங்களி லும் **வவுனியா பிர தே சத்தில்** ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை-காத்தான் கோட் டம், மறக் கம்பளை- கணேசபுரம் ஆகிய இடங்களிலும் மின் சாரம் தடைப்படும்.

## புன்னாலைக்கட்டுவனில் கசிப்புடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புன்னா லைக்கட்டுவன் பகுதியில். 750 மில்லிலீற்றர் கசிப்பு டன் 30 வயதுடைய சந் தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளை ப்பு நடவடிக்கையின்போது குறித்த சந்தேகநபர் இவ் வாறு கைது செய்யப் பட்டுள்ளார். (ம-7,104)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

"மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந் திரங்களாகவும் குளிர்விக்கும் பதனப்படுத்திக ளாகவும் சொல்லித்தரும் அறிவியலும் உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டு ருவாக்கம் செய்வது அவசியமாகும் . இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்று தலை வளர்க்கும்."

*-பொ. ஐங்கரநேசன் (தலைவர்-தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்

# அறிகுறிகள் காணப்பட்டால் தாமதிக்காது சிகிச்சை பெறுங்கள்

## மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படும் நிலையில், காய்ச்சல், தலையிடி உள்ளடங்கலாக டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரச மருத்துவ மனைக்குச் சென்று உரிய சிகிச்சையை பெற்றுக் கொள்ளு மாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மன்னார் நகரம், தோட்டவெளி, எருக்கலம்பிட்டி போன்ற பகுதிகளில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 118 டெங்கு நோயாளர்கள் இந்த வருடத்தில் அதிக அளவில் குறிப்பிட்ட மாதத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இவ்வருடம் தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 236 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனினும் மரணங்கள் எதுவும் நிகழவில்லை. பல நோயாளர்கள் தற்போது குருதிக்கசிவு நிலையுடன் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டு உள்ளனர்.

எனவே பொதுமக்கள் தமது வீடுகள் மற்றும் சுற்றுச்சூழல் பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறிந்து அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டெங்கு நோய் பரவும் இடங்களில் உள்ளவர்களுக்கு டெங்கு நோய் அறிகுறிகள் தென்படுமாயின் அருகில் உள்ள அரச மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தார். (நி-6-285)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
# வழங்குநர்களை பதிவு செய்தல் - 2023

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2023 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள், எழுது பொருட்கள், உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணனி, இலத்திரனியல் பொருட்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணி வகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப் பாகங்கள், துணைப் பொருட்கள் |
| A - 11 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருட்கள் |
| A - 16 | மருந்துப்பொருட்கள் |
| A- 17 | மரக்கன்றுகள் மற்றும் சாடிகள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B - 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுக்குளிராக்கி, மின்மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதலும், மீள முறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B - 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B - 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B - 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B - 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார், முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B - 10 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B - 11 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B - 12 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

- வழங்கல்கள் 2023 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
- ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூ.1000.00 இனை செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2023"** எனக்குறிப்பிட்டு **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்"** எனும் முகவரிக்கு 20.12.2022 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**க.தர்சன் தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

**021 224 4045 / 021 224 0017**

(C-5309)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடளாவிய...

வளைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் விடுமுறைக் காலத்தை இலக்காகக் கொண்டு இந்த சோதனைகள் இடம்பெறவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று முதல் எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி வரை இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப் படவுள்ளதாக அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## மதுபானம் அருந்...

கள் 16 மற்றும் 15 வயதுடைய மாணவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பாணந்துறை கடற்கரையில் விசேட தேடுதல் நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தவணைப் பரீட்சை முடிவடைந்ததையடுத்து, பாணந்துறை மதுபானக் கடையில் பியர் கொள்வனவு செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## 2023ஆம்...

வாக்கெடுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்த அதே வேளை சி.வி.விக்னேஸ்வரன் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழ்.பல்கலை...

துவ பீட முதலாவது ஆண்டு மாணவன் மீது 4வது ஆண்டு மாணவர்கள் சிலர் நேற்றுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழக ஒழுக்காற்று விசாரணைப் பிரிவில், தாக்குதலுக்கு உள்ளான முதலாவது ஆண்டு மாணவனால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று விசாரணைப் பிரிவினர் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர். (ம-7,33,104)

## யாழ்.ஒஸ்மானி...

லூரி உடற்பயிற்சி ஆசிரியரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலை மலசலகூடத்திற்கு செல்வதாக சென்ற மாணவன் நீண்ட நேரமாகியும் வராததால், மாணவனை தேடி குறித்த ஆசிரியர் சென்றுள்ளார்.

அங்கு மாணவன் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்டமையால் மாணவனை ஆசிரியர் விசாரித்த போது மாணவன் அங்கிருந்து தப்பி சென்று, தனது தந்தையாரை அழைத்துக் கொண்டு பாடசாலைக்கு வந்துள்ளான்.

பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்த மாணவனின் தந்தை, ஆசிரியர்களின் ஓய்வறையில் இருந்த குறித்த ஆசிரியர் மீது சரமாரியாக தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த ஆசிரியரை சக ஆசிரியர் அங்கிருந்து மீட்டு, வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7,33,104)

## பிரச்சினைகளைக்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதியமைச்சர் என்ற வகையில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த பல யோசனைகளை ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ளார் என குறிப்பிட்டார்.

சர்வதேச ரீதியாக எழுந்துள்ள சவால்களை வெற்றிகொள்ள நாம் இடைக்கால மற்றும் நீண்ட கால பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

குற்றங்களை மட்டும் சுமத்திக் கொண்டிருக்காமல் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுக்க வேண்டும் என்றும் அதுவே தமது நிலைப்பாடு என்றும் குறிப்பிட்டார்.

மேலும் எவ்வாறான சிக்கல்களை எதிர்கொண்டாலும் நாட்டின் தேசிய சொத்துக்களை விற்பனை செய்வது எமது கொள்கை இல்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-7)

## அதிகமாக...

சுரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலில் வேட்பாளர்கள் செலவிடும் பணத்தின் அளவைக் கட்டுப்படுத்தும் தேர்தல் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தச் சட்டத்தின்படி, ஒரு வேட்பாளர் எவ்வளவு செலவு செய்ய முடியும் என்பதை ஆணைக்குழு முடிவு செய்யும், மேலும் ஒரு வேட்பாளர் அதற்கு மேல் செலவு செய்து வெற்றி பெற்றால், அவரது உறுப்புரிமையை பறிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்.மாணவர்...

வருடம் தோறும் 1200 மாணவர்களை உயர்கல்விக்காக பாகிஸ்தான் அரசு உள்ளீர்க்கிறது.

அதேபோல் யாழ்.மாவட்டத்தில் உள்ள மாணவர்களும் தமது உயர் கல்வியை பாகிஸ்தானில் கற்பதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் யாழ். மாநகர ஆணையாளர் ஜெய சீலனும் கலந்து கொண்டார். (ம-7,33,104

## கனடா...

மற்றும் சங்கானை பகுதிகளைச் சேர்ந்த இருவரிடம் கனடாவிற்கு அனுப்புவதாக கூறி பெறப்பட்ட 55 இலட்சம் மற்றும் 44 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சித்திரை மாதம் இவ்வாறு பணம் பெறப்பட்டதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## மட்டு. விபத்து; இளைஞன் பலி

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

செங்கலடி - பதுளை பிரதான வீதியிலுள்ள பங்குளாவடி, புளியடிச்சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்திலே குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த இருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 18 வயதுடைய சதுர்ஷன் என்ற நபரே உயிரிழந்துள்ளார். (ம-7)

## தவறி...

விழுந்து காணாமல் போயுள்ள நிலையில் அவரைத் தேடும் பணி இடம்பெற்று வருகிறது.

நேற்று மாலை வேளையில் சில இளைஞர்கள் தூண்டில் போட்டு மீன்பிடியில் ஈடுபட்டனர்.

இதன்போது ஒரு இளைஞர் தவறி விழுந்துள்ளார்.

புத்தூர் கலைமதி பகுதியைச் சேர்ந்த 19 வயது மதிக்கத்தக்க இளைஞரே தவறி விழுந்துள்ள நிலையில் இளைஞரைத் தேடும் பணியில் அச்சுவேலி பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து ஈடுபட்டுள்ளனர். (ம-7,60,104)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1402
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 3 2 5 7 8 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.11.22
சீட்டிழுப்பு இலக்கம் - 977
C 32 35 59 75
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.11.22
சீட்டிழுப்பு இலக்கம் 3189
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
J 41 43 46 70
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1295
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
J 08 04 27 36 65

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.22
சீட்டிழுப்பு இலக்கம் 256
வெற்றி இலக்கங்கள்
துலாம் 11 15 29 37 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/11/22
சீட்டிழுப்பு இலக்கம் 4947
C 7 0 2 7 1 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1922
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.11.22
தினம் செவ்வாய்க்கிழமை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,233,520/-
B 06 24 51 66
5617 793

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.22
சீட்டிழுப்பு இல : 4083
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,444,380/-
வெற்றி இலக்கங்கள்
02 67 70 75 R

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 252
சீட்டிழுப்பு திகதி 2022.11.22
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 23 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,453,100/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,035,947/-
திகதி 2022-11-22
வெற்றி வாரம் 3634
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 22 27 33 56
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,295,480/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 36 08 27 57 64
சீட்டிழுப்பு வாரம் 1098
வர்ணம் இளஞ்சிவப்பு
திகதி 2022.11.22 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 279,497,285.80
தொலைபேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1748
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.11.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,736,960/-
வெற்றி இலக்கங்கள்
11 51 55 73 D


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13514)

**076 825 7716 (ஆகாஸ்)**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (13542)

## சிறுநீரகம் தேவை (Kidney)

நல்ல உள்ளம் கொண்டவர்கள் இவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கான B+ குருதி வகை உடையவர்கள் (B Rh Positive) கீழ்க் குறிப்பிட்ட தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

மதி- **075 040 5494**
Whatsapp No
**077 888 8662** (13539)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603,**
**076 097 3127**


## யாழ்ப்பாணம் மாநகர சபை
## கழிவகற்றலுக்கான உழவு இயந்திரங்களை சாரதியுடன் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல்- 2022

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டார ஆதனாங்களிலிருந்து வெளியேற்றப்படும் திண்மக்கழிவுகளினை வகைபிரித்து எடுத்துச்சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு சாரதியுடன் உழவு இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 23.11.2022 - 06.12.2022 ஆம் திகதிவரை சபையின் கொள்வனவுப் பகுதியுடன் தொடர்பு கொண்டு கேள்விகளுக்குரிய கூறுவிலைப் படிவங்களினைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 06.12.2022 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்னதாக பதிவுத்தபாலிலோ. நேரிலோ சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**கேள்வி திறக்கும் திகதி : 06.12.2022**
**நேரம் : மு.ப 11.00 மணி**

முதல்வர்
மாநகரசபை, யாழ்ப்பாணம்.
(C-5312)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு - **ஜெயம்**
**077 814 7389, 077 986 5457** (13541)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 25.10.2022 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்துரை நேசராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 24.11.2022 வியாழக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி
(13544)
இங்ஙனம்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மண்ணில்
02 - 12 - 1935



விண்ணில்
21 - 11 - 2022

### கந்தையா சிவராசா

(ஓய்வுபெற்ற உப அதிபர், அரியாலை, ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, இணைச் செயலாளர், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசஇராஜேஸ்வரி பேய்ச்சி அம்மன் ஆலயம்)

*நாயன்மார்கட்டு அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2022) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.*

*அன்னார் கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் செல்லத்தம்பி - அம்மாக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகுமார்(லண்டன்), சுகுமார்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சினி, கோஷல்யா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், இரகுபதி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பத்மராணி காலஞ்சென்றவர்களான துரைராசா, திலகரத்தினம், இராஜேஸ்வரி மற்றும் ரேவதி(குட்டி அம்மா), முருகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் பைரவி, நர்த்தனன், ஜெனதன், அபிநயா, நிதிலா, விஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ராஜ்குமார், ரஜனி, ரஜனிகாந், ராஜேந்திரகுமார், ஜெயக்குமார், தர்சினி, ஜீவகுமார், நந்தகுமார், சுபாசினி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (24.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

இல.29, வைரவர் கோவில் வீதி,
நாயன்மார்கட்டு, அரியாலை. (13543)
021 221 1140
தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 * 12 * 1940



மறைவு
22 * 11 * 2022

### திருமதி. அருமைநாயகம் சீதாலட்சுமி

*அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வைமன் வீதி, நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட அருமைநாயகம் சீதாலட்சுமி அவர்கள் 22.11.2022 (செவ்வாய்க்கிழமை) அன்று இறையடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான குருநாதபிள்ளை - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருமைநாயகத்தின் பாசமிகு மனைவியும் சிவசக்தியின் ஆருயிர்த் தாயாரும் காலஞ்சென்ற தெய்வேந்திரத்தின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான அன்னசோதிப்பிள்ளை, கிளி, சிவப்பிரகாசம் மற்றும் திருச்செல்வம், பராசக்தி, சுந்தரலிங்கம், கனகலிங்கம், மங்கையற்கரசி, காலஞ்சென்றவர்களான திருக்கேதீஸ்வரி, கௌரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, நாகராசா, தியாகராசா, அரியமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அகீபன், ஜனனி, லக்ஸ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.11.2022 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.* (C-5314)

வைமன் வீதி, நல்லூர். தொ.பே. இல: 077 324 8792 தகவல் : குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org